Department of
Education

GOVERNMENT OF
WESTERN AUSTRALIA

# VacSwim அக்டோபர் நிகழ்ச்சிகள்

## தகவல் தாள்

VacSwim அக்டோபர் மற்றும் கோடைப் பள்ளி விடுமுறை நாட்களில் குதுகலமான நீச்சல் வகுப்புகளை வழங்குகிறது. மேற்கு ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்குத் தண்ணீரில் பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் இருப்பதற்கான திறன்களை வளர்க்க உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### எவெரெல்லாம் பதிவு செய்யலாம்?

5 முதல் 17 வயதுடைய, 1 முதல் 16 வரையிலான நீச்சல் பயிற்சி நிலைகளில் உள்ள குழந்தைகள் இதில் பங்குபெறலாம்.

நீச்சல் பயிற்சி நிலைகள் குறித்த குறிப்பிட்ட தகவலுக்கு, எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

### சேர்வதற்கான பதிவுசெய்தல் தொடங்குவதும் முடிவதும் எப்போது?

17 ஜூலை 2024, புதன் அன்று பதிவுசெய்தல் தொடங்கும்.

14 ஆகஸ்ட், 2024, புதன் அன்று பதிவுசெய்தல் முடிவடையும்.

### எவ்வாறு பதிவுசெய்வது?

எங்கள் வலைத்தளத்தில் பதிவு செய்வதே எளிதான வழியாகும்.

மாறாக, நீங்கள் பதிவுசெய்தல் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யலாம். நிரப்பிய பின், அதை அச்சிட்டு, பதிவுசெய்வதற்கான இறுதித் தேதிக்குள் எங்களுக்கு அனுப்பிவையுங்கள். விவரங்கள் பின்வருமாறு:

VacSwim
Department of Education
Statewide Services Centre
33 Giles Avenue
Padbury WA 6025

### அக்டோபர் நிகழ்ச்சிகளுக்கு எவ்வளவு செலவாகும்?

| நிகழ்ச்சி | ஒற்றை | ஒற்றைச் சலுகை | குடும்பம்* | குடும்பச் சலுகை* |
|---|---|---|---|---|
| **அக்டோபர் நிகழ்ச்சி** | $32.00 | $20.50 | $85.50 | $57.00 |
| **அக்டோபர் குறுகிய நிகழ்ச்சி** | $16.50 | $11.50 | $43.50 | $29.00 |

*ஒரே முகவரியில் இருந்து 3 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் ஒரு குடும்பச் சேர்வுப்பதிவில் அடங்குவார்கள்.

குழந்தைகளுக்கான அல்லது மேற்பார்வையிடும் வயது வந்தவர்களுக்கான நீச்சல்குள நுழைவு இந்த விலைகளில் சேர்க்கப்படவில்லை.


CC BY

## யாருக்குச் சலுகைபெறத் தகுதியுண்டு?

பின்வரும் சலுகை அட்டைகளில் ஒன்றைக் கொண்டுள்ள எவராயினும்:

- கம்பேனியன் கார்டு
- காமன்வெல்த் சீனியர்ஸ் ஹெல்த் கார்டு
- டிபார்ட்மெண்ட் ஆஃப் வெடரன்ஸ் அஃபேயர்ஸ் (கோல்டு, வொயிட், ஆரஞ்ச்)
- ஹெல்த் கேர் கார்டு
- அவுட் ஆஃப் ஸ்டேட் சீனியர்ஸ் கார்டு
- பென்ஷனர் கன்செஷன் கார்டு
- ஸ்டேட் கன்செஷன் கார்டு
- WA சீனியர்ஸ் கார்டு

## வகுப்புகள் எப்போது நடைபெறும்?

புதன்கிழமை, செப்டம்பர் 25 முதல் வெள்ளிக்கிழமை, அக்டோபர் 4 2024 வரை, அக்டோபர் நிகழ்ச்சிகள் 8 நாட்களுக்கு நடைபெறும்.

திங்கள்கிழமை, செப்டம்பர் 30 முதல் வெள்ளிக்கிழமை, அக்டோபர் 4 2024 வரை, அக்டோபர் குறுகிய நிகழ்ச்சிகள் 5 நாட்களுக்கு நடைபெறும்.

## வகுப்புகள் எந்த நேரத்தில் நடைபெறும்?

அக்டோபர் நிகழ்ச்சியானது பெரும்பாலான நிகழ்விடங்களில் காலையில் நடைபெறும்.

அக்டோபர் குறுகிய நிகழ்ச்சிகள் மதிய நேரத்தில் நடைபெறும், வழக்கமாக மதியம் 12:25 முதல் 3:25 மணிவரை.

வகுப்பு நேரங்கள் நிகழ்விடத்தைப் பொறுத்து மாறுபடும். மேலும் தகவலுக்கு எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

## வகுப்புகள் எவ்வளவு நேரம் நடைபெறும்?

அக்டோபர் நிகழ்ச்சிகளுக்கான வகுப்புகள் 45 நிமிடங்கள் நீடிக்கும்.

அக்டோபர் குறுகிய நிகழ்ச்சிகளுக்கான வகுப்புகள் 35 நிமிடங்கள் நீடிக்கும்.

## VacSwim குறித்துக் கூடுதல் விபரங்களை அறிந்துகொள்வது எப்படி?

நீங்கள் எங்கள் வலைத்தளத்தை இங்கு பார்வையிடலாம் education.wa.edu.au/vacswim, vacswim@education.wa.edu.au என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளலாம் அல்லது (08) 9402 6412 என்ற எண்ணில் எங்களை அழைக்கலாம்.


CC BY